> **சின்னஞ்சிறு செயல்களில்தான் கடவுள் விரும்பும் புனிதம் வளரும்.**
>
> - திருத்தந்தை பிரான்சிஸ்

மலேசியாவில் வாழும் பெரும்பாலோரின் முன்னோர்கள் ஒரு காலத்தில் இங்கு குடியேற்றவாசிகளாக குடியேறியவர்கள் என்பது உண்மை.

சிலர் இரண்டாம் தலைமுறையாக இருக்கலாம் அல்லது 15 ஆம் நூற்றாண்டு மலாக்கா சுல்தான் காலத்துப் பின்னனியைக் கொண்டிருக்கலாம். இந்நாட்டின் முந்தைய நிர்வாகம், இதனை ஓர் அரசியல் ஆயுதமாக சிலத் தரப்புகள் பயன்படுத்திக் கொள்ள விட்டு விட்டது. இன மற்றும் சமய ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்டது. புதிய மலேசியா உருவாவதற்கு இது ஒரு காரணம் என்றும் கூறலாம். வித்தியாசத்தை ஏற்படுத்தியது நாமே. இந்த புதிய மலேசியாவின் மகிழ்ச்சியைப் பாராட்ட வேண்டுமென்றால், அனைவருக்கும் நியாயமான நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக, கழிவறைகளைசு சுத்தம் செய்து, நமது சாலைகளை அமைத்து, உணவகங்களில் பரிமாறி கொண்டு, நம் மத்தியில் வாழும் 2.7 மில்லியன் அந்நியத் தொழிலாளர்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வேண்டும்.

நற்செய்தியில், எசாயா நூல் வாசகத்தை வாசித்து, அதற்குரிய அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்ற இயேசுவை, மக்கள் கூட்டம் உடனே புறம்தள்ளி வைத்தது. சில உரிமைகளையும் சலுகைகளையும் பெறுவோர், அவற்றை மற்றவர்களுடன் குறிப்பாக அந்நியர்களுடன் அல்லது தங்களை விட வித்தியாசமானவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை. இயேசு காலத்தில் சீதோன் அல்லது சிரியாவாக இருந்தது, இன்றைய காலக்கட்டத்தில் அது வங்காளதேசம் அல்லது மியான்மாராக இருக்கிறது? சலுகைக்குரிய மக்கள் என்ற வட்டத்திற்குள் நாம் இருக்கிறோமா, நமது அந்நியர்களை அதிகாரம் செய்கிறோமா? மற்றவர்களை விட நாம் என்ன உயர்ந்தவர்களா, வித்தியாசமானவர்களா? மணவிலக்கு பெற்ற கத்தோலிக்கர்கள், திருமுழுக்குப் பெறாத குழந்தைகள், திருநங்கைகள், ஓரினச்சேர்க்கையில் ஈடுபாடு கொண்ட ஆண்கள் அல்லது பெண்கள் முதலியோரை நாம் எவ்வாறு நடத்துகிறோம்! தவிர, மிகவும் வறுமையில் உள்ளவர்களோடு பழகவும் நாம் தயங்குகிறோம்! நமது நண்பர்கள் யார்? உண்மையான நட்பு எது? நம் வாழ்வில் ஆழமாக ஆராய்ந்து அறிய வேண்டிய கேள்விகள் இவை?

**அன்பே புனிதம், புனிமே அன்பு** என புனித பவுல் (1கொரி.13) நமக்கு நினைவுறுத்துகிறார். இயேசுவின் அன்பில் அனைவரும் அடங்கியுள்ளனர். அந்நியர்கள், ஏழைகள் ஆகிய அனைவரும் அன்பு செய்ய வேண்டியவர்கள். அவர்களிடம் உள்ள பணத்தையோ பேசும் வார்த்தையையோ அது பார்ப்பதில்லை. இலவசமாக பெற்றுக் கொண்ட அந்த அனைத்துலகக் கொடையை, பாராபட்சமின்றி பகிர்நது பிறருக்கு ஒளியாக இருப்போம். அன்பு நமக்கு ஊக்கத்தை அளிக்க வேண்டும். அப்போது ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவை நாம் காணலாம்! ✝

**இன்றைய விவிலிய குறிப்பு:**

எரேமியா 1: 4-5, 17-19

திருப்பாடல்: 71 1-2,3-4, 5-6, 15,17

1 கொரிந்தியர் 12: 31-13:13

லூக்கா 4: 21-30

**வாரம் ஒரு வசனம்**

**அன்பே புனிதம், புனிமே அன்பு.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 05/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

3 பெப்ரவரி 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 4ம் ஞாயிறு

தி ரு மு ழு க் கு ப் பெ ற் று அ னு ப் ப ப டு த ல்

மாதாந்திர கருப்பொருள்:

**புனிதத்திற்கு அழைத்தல்**

# அனைவரையும் அன்பு செய்



கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் வீட்டுப் பணிப்பெண்களாக இருந்தாலும் சரி, அந்நியத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அந்நியக் குடியேற்றத் தொழிலாளர்களைத் தவறாக நடத்தும் செய்திகள் அண்மைய ஆண்டுகளில் அடிக்கடி வெளிவருகின்றன. ஏறக்குறைய மொத்தம் 2.7 மில்லியன் குடியேற்றக்கார்கள் மலேசியாவில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் அகதிகளுக்கான ஐ.நா ஆணையத்தின் (UNHCR) அகதிகள் அந்தஸ்து உள்ளவர்கள். இவர்கள் போர் அல்லது வறுமை காரணமாக நாட்டை விட்டு ஓடிவந்தவர்கள். ஆனால் பெரும்பாலான அந்நியத் தொழிலாளர்கள் சட்டப்பூர்வ வேலை அனுமதிகளைப் பெற்றுள்ளனர்.




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


## *2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
## திருமுழுக்கு அளித்து அனுப்புதல்
## *2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
## புனிதத்திற்கு அழைக்கிறது

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 4ஆம் ஞயிறு (ஆண்டு 3) சனி 02-02-2019 - ஞாயிறு 10-02-2019**
எரே : 1: 4-5, 17-19 தி.பா: 71: 1-2, 3-4, 5-6, 15, 17 1 கொரி: 12: 12-31; 13: 13 லூக்கா : 4: 21-30
**"என் வாய் நாள்தோறும் உமது மீட்பை எடுத்துரைக்கும்" - திபா 71**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பசில்) | **காலை 7.30 மணிக்கு ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்த நாள்: திருப்பலி / மெழுகுவர்த்தி ஆசிர்வதிப்பு / திருச்சுற்று பவணி**<br>காலை 8.30 - பகல் 1.00 வரை **மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான தியானம்** |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹிலாரி)<br>திருப்பலி (ஆ) (புனித அம்புறோஸ்)<br>திருப்பலி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 04 | 6.45 கா | திருப்பலி | *இரவு 9 மணிக்கு சீனப் புத்தாண்டு திருவிழிப்பு திருப்பலி – தித்தி (சீனமொழி)* |
| செவ் | 05 | 8.30 கா | திருப்பலி | *சீனப் புத்தாண்டு திருப்பலி* |
| புதன் | 06 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 07 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) புனித வனத்து சின்னப்பர் சிற்றாலயம் - ரஹாங்*** |
| வெள் | 08 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.00 மணி செபமாலை, கொடியேற்றம், திருமணி ஆராதனை, நோயில் பூசுதல், திருப்பலி – (OLL) சாகா*** |

**பொதுக்காலம் 5ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
எசா : 6: 1-8 தி.பா: 138: 1-2, 2-3, 4-5, 7-8 1 கொரி: 15: 1-11 லூக்கா : 5: 1-11
**"தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்" - திபா 138**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | **பிப்பரவரி 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் திருப்பலிகளுக்கு பின்னர் நோயாளிகள், வயது முதிர்ந்தவர்களுக்கு விசேட ஆசிர்வாதம் வழங்கப்படும்** |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித யோசேப்பு)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி ஆரம்பபள்ளி 6)<br>திருப்பலி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2019 *பிப்பிரவரி (மாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
26/27 ஜனவரி 2019 - ரிம: 9,039.70
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**2) இன்று சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் நிதிக்காக 2 வது காணிக்கை எடுக்கப்படும்.**
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**3) திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை:**
அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம:6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (தமிழ்) ரிம:5.00
இ) 2019 விவிலிய நாட்குறிப்பு(ஆ/தமிழ்) ரிம:20.00

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
அ) மரியா சின் யோன் ந்யொங் (இறப்பு: 27/1/2019)
ஆ) சவரியம்மாள் (இறப்பு: 25/1/2019)
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

**iv) திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின், குருவானவரைச் சந்திக்க தேதியை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**v) அதிச திருப்பலி வழி நடத்தும் பட்டியல்**(ஜனவரி - ஜூன் 2019) தயாராக உள்ளது. அதிச/சோன் பொறுப்பாளர்கள் உங்களின் பிரதியை எடுத்து செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்

**vi) பங்கு ஊடகப் பணிக்குழு:** இதுவரை பொறுப்பிலிருந்த திரு மைக்கல் சூங் அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிப்போம். இப்போது பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் திரு அல்பர்ட் அவர்களை வரவேற்போம். உங்களுடைய செய்திகளை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். churchofthevisitation @gmail.com or terminate79@gmail.com

**vii) சீனப்புத்தாண்டு இரவு திருப்பலி** -தித்தி 4/4/19 (திங்கள்) இரவு 9.00 மணி
**சீனப்புத்தாண்டு திருப்பலி -ஆலயத்தி**ல் 5/2/19 (செவ்) காலை 8.30

**திருமண அருளடையாளம்: வாழ்த்துகள்:**
அ) ராஜ சூரியா&மெக்டலின் 9/2/19 காலை 11.00
ஆ) போல்செல்வா & இவாஞ்சலின் ஷங்கரி 9/2/19 பகல் 3.30

இன்று திருப்பலியை வழிநடத்திய புனித ஹிலாரி அதிசவினருக்கு நமது வாழ்த்துகள்.

"சிறப்பு தூதுரைப் பணி ஆண்டு"

**"திருமுழுக்கு அளித்து அனுப்புதல்" : இவ்வுலகில் திரு அவை ஒரு தூதுரைப்பணி**

- **சிறப்பு தூதுரைப் பணி ஆண்டை முன்னிட்டு 'டி' சட்டைகள் விற்பனையில் உள்ளன.** இதற்காக உங்கள் பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுங்கள். நிறங்கள்: வெள்ளை/அரக்கு /பச்சை/இள நீலம் (அளவுகள் *(XS/S/M/L/XL/XXL)*
- **திரு அவையை அறிந்து கொள்ளுதல்:** திருஅவையை அறிந்துகொள்ளவும் அதைப் போற்றிடவும் வாருங்கள்: நாள்:14-02-2019 (வியாழக்கிழமை) இடம்: APC, கோலாலம்பூர் நேரம்: மாலை 7-10 வரை) குறைந்த கட்டணமாக ரிம 10/- ஒரு நபருக்கு: தொடர்புகொள்ள 03-20 26 64 66
- **ராக்கேலின் திராட்சைத் தோட்டம்:** கருக்கலைப்பினால் மன அழுத்தத்தில் இருப்போருக்கு அதிலிருந்து விடுபடவும், இறைவனின் இரக்கத்தையும் அவரின் அளவற்ற அன்பையும், குணமளிக்கும் அருளையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பு. 3 நாள் / 2 இரவு தங்கியிருந்து தியானத்தில் கலந்துகொள்ள அழைக்கிறோம். பினாங்கு 15-17 மார்ச் (பதிவுக்கு இறுதி நாள்: 01-03-2019) கோலாலம்பூர் 21-23 ஆகஸ்ட் (இறுதி நாள்:8-8-2019) தொடர்புக்கு: மேரி (016-419 0538)
- **மறைக்கல்வி வகுப்புகள் தொடங்கிவிட்டன.** இன்னும் உங்களுடைய குழந்தைகளைப் பதிந்துகொள்ளாதவர்கள் ஆலய உணவு விடுதிக்கு மேல் (இரண்டாவது மாடி - தமிழ் மறைக்கல்வி அலுவலகம்) சென்று பதிந்து கொள்ளுங்கள்.தொடர்புக்கு: சூசை செல்வநாதன் (012- 903 6581)
- **2019 தவக்காலப் பிரச்சாரம்**: மாமறை மாவட்ட மனிதவள மேம்பாட்டுப் பணிக்குழு இதற்கான உரையை ஏற்பாடு செய்கின்றனர். **நாள்:16-02-2019 நேரம்: காலை 8.00 - பகல் 1.00 வரை. இடம்:மினவுதல் தேவாலய மண்டபம்.** அனைத்து மனித வள மேம்பாட்டுப் பணிக்குழுவினர், அதிச மையக்குழுவினர். மறைக்கல்வி ஆசிரியர்கள், இளைஞர்கள், நற்கருணைப் பணியாளர்கள் அனைவரும் இதில் கட்டாயம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். தொடர்புக்கு: சார்ல்ஸ் (017- 615 8961)
- **மருத்துவமனை மற்றும் வீடுகளில் இருக்கும் நோயாளிகளின் குடும்பத்தினரின் கவனத்திற்கு:** தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரிவிக்கவும். கூடியமட்டும் குருவானவர்கள் வந்து சந்திப்பார்கள்.
- **நற்கருணைப் பணியாளர்கள் மற்றும் சிறப்புப் பணியில் உள்ளவர்களின் கவனத்திற்கு:** உங்கள் சோன்/அதிச வில் உள்ள நோயாளிக்களுக்கு ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்குவதில் முக்கிய அக்கறைக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **திருப்பலிக்கு முறையாக உடை அணிந்து வருக!:** பங்கு மக்கள், பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்வோர் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு முறையாக உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம். அரைக்கால் சட்டை/உடல் தெரியும் ஆடைகள், பனியன், ஜப்பான் மிதியடி ஆகியவற்றை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய சிறந்த ஆடையை அணிந்து வந்து திருப்பலிக்கு உரிய மரியாதையை வழங்குங்கள்.
- **தேசிய மொழியில் ஆல்ஃபா பயிற்சி** : பிப்ரவரி 3,10,24 & மற்றும் மார்ச் 3 - நேரம்: பகல் 2.30- மாலை 6.30 வரை. இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். தொடர்புக்கு: மரியா - 014- 350 3718 - அனைவரையும் வரவேற்கிறோம்

- <u>பிப்ரவரி 8 - 10 (வெள்ளி-ஞாயிறு) - சாகா ரந்தாவ் - புனித லூர்து அன்னை சிற்றாலய திருவிழா</u>
  தொடர்புக்கு: ரோபர்ட் (011 2855 1708)
  8/2/19 ( வெள்ளி) மாலை 7.00 மணி: செபமாலை/கொடியேற்றம்/திருமணி ஆராதனை/நோயில் பூசுதல்/திருப்பலி
  9/2/19 (சனி) மாலை 6.30 மணி: செபமாலை / திருப்பலி / திருச்சுற்றுப்பவனி
  10/2/19 (ஞாயிறு) காலை: 10.00 மணி: செபமாலை/திருவிழா திருப்பலி - அனைவரும் வருக!
- குருக்களின் மாதாந்திர தியானம்: பிப்ரவரி 19 & 20 - APC, K.L.

**கடந்த ஒரு மாத காலமாக இங்கு வந்து தங்கியிருந்து மேய்ப்புப் பணியில் உதவி செய்த சகோதரர் பிலிப் ஆசிர்வாதம் அவர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து அவருடைய குருத்துவக் கல்விக்காக நம்முடைய செபங்களில் நினைவு கூருவோம்**

**சீனப்புத்தாண்டை முன்னிட்டு பங்கு அலுவலகம் பிப்ரவரி 5 & 6 தேதிகளில் மூடப்பட்டிருக்கும்.**
**புத்தாண்டை கொண்டாடும் சீன சகோதர சகோதரிகளுக்கு**
**சீனப்புத்தாண்டு நல் வாழ்த்துகள்!**